**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 253** **நாள்: 30.06.2026**

**சமூகத்தின் சம உரிமைகளுக்காகவும், பாலின விழிப்புணர்வுக்காகவும் உலகம் முழுவதும் ஜூன் மாதம் கொண்டாடப்படும் பெருமை மாதம் (Pride Month) 2026னை முன்னிட்டு, ரிப்பன் கட்டட வளாகத்தில் இன்று நடைபெற்ற கையெழுத்து இயக்கத்தில் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் கையெழுத்திட்டார்.**

சமூகத்தின் சம உரிமைகளுக்காகவும், பாலின விழிப்புணர்வுக்காகவும் உலகம் முழுவதும் ஜூன் மாதம் கொண்டாடப்படும் பெருமை மாதம் (Pride Month) 2026னை முன்னிட்டு, இன்று (30.06.2026) ரிப்பன் கட்டட வளாகத்தில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள், இணை ஆணையாளர்கள் முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., (சுகாதாரம்), அவர்கள், திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., (கல்வி) அவர்கள், திரு. செ. சரவணன், இ.ஆ.ப., (பணிகள்) அவர்கள் கையெழுத்திட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வில் மாநகராட்சி அலுவலர்கள், தோழி மற்றும் தமிழ்நாடு ரெயின்போ அமைப்பினர், திருநங்கைகள், திருநம்பிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகம் (Gender & Policy Lab - GPL) மூலம், பெருமை மாதம் 2026னை (Pride Month 2026) முன்னிட்டு, சமத்துவம், பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கத்தை (Inclusion) ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றை வெற்றிகரமாக நடத்தியது.

மாதம் முழுவதும் நடைபெற்ற நிகழ்வுகளின் ஒரு பகுதியாக, ரிப்பன் கட்டடம் (Ripon Building) 23.06.2026 அன்று முதல் 30.06.2026 வரை வானவில் நிறங்களில் ஒளிரச் செய்யப்பட்டு சமூகத்துடன் ஒற்றுமை வெளிப்படுத்தப்பட்டது. மேலும், மெரினா கடற்கரையில் மணல் சிற்ப விழிப்புணர்வு நிகழ்ச்சி, கலை மற்றும் பண்பாட்டு நிகழ்வுகள் மூலம் பன்முகத்தன்மையை கொண்டாடிய "வண்ணங்கள்" (Vannangal) பண்பாட்டு நிகழ்ச்சி மற்றும் சம உரிமை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தை வலியுறுத்தும் வகையில் சமூக உறுப்பினர்கள், தன்னார்வ அமைப்புகள் மற்றும் ஆதரவாளர்கள் பங்கேற்ற பெருமை நடை (Pride Walk) ஆகிய நிகழ்வுகள் சிறப்பாக நடத்தப்பட்டன.

இந்த தொடர் நிகழ்வுகளின் நிறைவாக, இன்று (30.06.2026) கையெழுத்து இயக்கம் (Pride Month Signature Campaign) நடைபெற்றது. பாலின அடையாளம் அல்லது பாலியல் நோக்குநிலை எதுவாக இருந்தாலும், ஒவ்வொரு நபரின் சமத்துவம், கண்ணியம்,

பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கத்தை மதிக்கும் சமூகத்தை உருவாக்குவதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பெருநகர சென்னை மாநகராட்சியின் வாயிலாக சிறப்பாக நடத்தப்பட்டன.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**